**மஹரகம நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூலை 31 திகதியும் சபை தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மஹரகம நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | லியனகொட பொது ஆயுர்வேத நிலையத்தின் ஆரம்ப இருப்பு மீதி, மருந்துகள் கொள்வனவு செய்தல் மற்றும் வழங்குதல் கணக்கீடு செய்யாமையால் வழங்கள் மற்றும் உபகரணக் கணக்கு ரூபா 48,554 தொகையினால், வருமான உதவிக் கணக்கு ரூபா 46,761 தொகையினால் மற்றும் இறுதி இருப்பு மீதி ரூபா 479,581 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். நாட்குறிப்புகள் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | இறுதி இருப்பு மீதிக்கு எரிபொருள் இருப்பாகிய ரூபா 282,699 தொகை மற்றும் நிர்மாண வேலை பண்ட இருப்பு ரூபா 458,673 தொகை சீராக்கல் மேற் கொள்ளப்படாமையால், இருப்பு மீதி ரூபா 741,372 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். நிர்மாண வேலை இருப்பு மீதி இருப்பு மீதியுடன் சீராக்கல் செய்யப்பட்டு ள்ளது. அட்டவணையில் உட்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுத்தொகை பெற்றுக் கொள்ளல் மாத்திரம் தவறி உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | முத்திரைக் கட்டணங்களில் இருந்து அறவீடு செய்யும் அடிப்படையில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து 2018 ஆண்டில் பெற்றிருந்த ரூபா 29,384,000 தொகை பெறுமதியான 02 கம்பெக்டர்களுக்காக ஆண்டிற்குரிய மூலதன செலவுகள் என ரூபா 7,108,250 தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன், மொத்தப் பெறுமதியும் மூலதன செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 22,275,750 இனால் மூலதனச் செலவுகள் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். நாட்குறிப்புகள் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. |
| (iv) | முத்திரைக் கட்டணத்தின் மூலம் அறவீடு செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 8,477,000 தொகைக்குப் பதிலாக மாகாண சபை கடன் கணக்கு மற்றும் அறவீடு செய்யக் கூடிய துணைச் சேவை கணக்கு சீராக்கல் மேற்கொள்ளும் போது ரூபா 8,122,000 தொகை என கணக்கீடு செய்யப்பட்டி ருந்தமையால் ரூபா 355,000 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். நாட்குறிப்புகள் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. |
| (v) | கடன் அடிப்படையில் பெற்றிருந்த ரூபா 29,384,000 தொகை பெறுமதியான 02 கம்பெக்டர்கள் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகைக் கணக்கிற்கு செலவு வைக்காமல் பொதுக் களஞ்சியக் கணக்கிற்கு செலவு வைத்திருந்தால் இருப்பு மீதி அப் பெறுமதியினால் குறைந்திருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். நாட்குறிப்புகள் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. |
| (vi) | 2017 ஆண்டின் போது கடன் அடிப்படையில் பெற்றிருந்த 02 டிரக்டர்கள் மற்றும் 02 டேலர்களுக்காக அறவீடு செய்யப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 1,368,750 இற்கான தொகை கணக்கீடு செய்யப்படாமையால் மோட்டார் வாகனக் கணக்கு, மூலதனச் செலவுக் கணக்கு, நிலுவை முத்திரைக் கட்டணக் கணக்கு மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகைக் கணக்கு குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். நாட்குறிப்புகள் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. |
| (vii) | மின்சார தனியார் கம்பனி பங்குகளில் முதலீடு செய்திருந்தமைக்காக 2017 ஆம் | கொடுக்கல் வாங்கல்கள் | ஏற்றுக்கொள்கிறேன். நாட்குறிப்புகள் மூலம் சரி |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்கான கிடைத்திருந்த பங்கிலாபம் ரூபா 3,364,200 தொகை ஏனைய வருமானக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக பங்கு முதலீட்டுக் கணக்கிற்கு செலவு வைத்த காரணத்தினால் முதலீட்டுக் கணக்கு குறைவாகவும் பற்றாக்குறை மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | செய்யப்பட்டுள்ளது. |
| (viii) | குப்பை போக்குவரத்து தொடர்பாக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,304,376 இற்கான தொகை கடன்கொடுத்தோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய தொகை கடன் கொடுத்தோர் என கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குப்பை போக்குவரத்தின ஒரு பகுதி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கியதுடன், அந்த நிறுவனத்திற்கு சபையினால் செலுத்த வேண்டிய தொகை மற்றும் அந்த நிறுவனத்தினால் சபைக்குச் செலுத்த வேண்டிய தொகை சமப்படுத்தப் பட்டுள்ளது. |
| (ix) | 2018 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த முன்னைய ஆண்டிற்கான பெற வேண்டிய நிலையான வைப்புக் களுக்கான வட்டி ரூபா 1,380,519 தொகை பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டிக் கணக்கிற்கு செலவு வைக்காமையால் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி அந்தப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்புகள் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 10 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் அவற்றின் தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கஞ் செய்ய போது நிதிக்கூற்றுக்களில் ரூபா 15,687,855 தொகை மிகையாகவும் ரூபா 10,121,317 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். அட்டவணைகள் மற்றும் சீராக்கல் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படும். |

### (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 55,249,396 தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாது இருந்தது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக அட்டவணைகள் அல்லது தேவையான தகவல்கள் சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக் காட்டியுள்ள அனைத்து கணக்குகளி னதும் அட்டவணைகள் மற்றும் சீராக்கல்கள் மேற்கொள்வேன். |

### 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 165 உப பிரிவு ‘‘இ’’ | மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் காணித் துண்டு களின் உண்மையான விற்பனைப் பெறுமதி இடையே வித்தியாசத்தை இணக்கஞ் செய்து அந்த வித்தியாசத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நகர சபைக் கட்டளைச் சட்டத் தின் (அதிகாரம் 255) பிரிவு 165 உப பிரிவு ‘‘இ’’ இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | 17 காணி விற்பனை களில் மதிப்பீட்டுப் பெறுமதிகளில் மற்றும் மீதித் துண்டுகளின் உண்மையான விற்பனைப் பெறுமதி இடையே வித்தியாச த்தை செலுத்தும் காலத்தை குறிப்பிட்டு கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் மேற் கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் தாபனக் கோவை | | | |
| அத்தியாயம் XXIV பிரிவுகள் 4.4 மற்றும் 4.5 | ஊழியர் கடன் அறவிடப் பட முடியாத சந்தர்ப்பங் களில் பிணையாளர் களிடம் அல்லது ஓய்வூதிய பணிக்கொடை யில் இருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அத்தியாயம் XXIV பிரிவுகள் 4.4 மற்றும் 4.5 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். அறவிடப்பட வேண்டிய நபர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------------------ | | | |
| | நி.பி. 188(2) | வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறியிருக்காத ரூபா 9,325 தொகை பெறுமதியான காசோலை ஒன்று மற்றும் 03 காசுக் கட்டளை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நி.பி. 188(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத ரூபா 3,000 இற்கான காசோலை மே மாத வங்கி இணக்கக் கூற்றில் தீர்க்கப்பட்டு ள்ளது. காசுக் கட்டளையில் ரூபா 6,488 தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. |
| (ஈ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>------------------------------------ | | | |
| | இலக்கம் 09/2009 மற்றும் ஏப்ரல் 16 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரிவு 2 II மற்றும் V | வெளிக்கள உத்தியோகத்தர்கள் அலுவலகத்துக்கு உள்வரும் போது விரலடையாள இயந்திரத் தின் மூலம் உள்வருதல் வெளிச்செல்லல் உறுதிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் 09/2009 மற்றும் ஏப்ரல் 16 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கைளின் பிரிவுகள் 2 II மற்றும் V பிரகாரம் தற்போது வெளிக்கள உத்தி யோகத்தர்கள் உரிய முறையில் வாரத்தில் குறிப்பிட்ட இரண்டு நாட்களில் விரலடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் வெளிச் செல்லல்களை உறுதிப்படுத்துவதற் காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |
| (உ) | ஏனைய சுற்றறிக்கைகள்<br>-------------------------------- | | | |
| | உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா.) 2012 ஜூலை 11 ஆந் திகதிய WP/LGD/ 01/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி XXI | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மற்றும் நில மீட்புகள் தொடர்பாக திட்டக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக காலாண்டு அறிக்கை ஒன்று உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | ஆணையாளரின் (மே.மா.) 2012 ஜூலை 11 ஆந் திகதிய WP/LGD/ 01/2012 ஆம் இலக்க சுற்றறிக் கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது காலாண்டு அறிக்கை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 62,788,166 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 192,717,964 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலக்கம் 607629 கொண்ட நடைமுறைக் கணக்கு 2015 ஆகஸ்ட் மாதம் மூடப்பட்டிருந்த போதிலும் காசுகளின் கீழ் ரூபா 2,052,258 இற்கான பெயரளவில் பெறுமதி ஒன்று மீளாய்வாண்டின் போது கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தக் கணக்கில் தீர்க்க முடியாத பல சிக்கல்கள் காணப்பட்டதால் அது தொடர்பாக பரிசோதனை அறிக்கை கணக்குக் குழுவிற்கு அனுப்புவதற்காக சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. அதன் மீதித் தொகையை பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் ரூபா 000' | சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 000' | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 000' | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா. 000' | மதிப்பீட்டு வருமானம் ரூபா 000' | சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 000' | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 000' | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 000' |
| வீதவரி மற்றும் வரி | 102,506 | 109,778 | 109,821 | 61,387 | 95,506 | 87,236 | 70,300 | ,54,627 |
| வாடகை | 21,167 | 26,334 | 25,012 | 4,487 | 19,206 | 7,399 | 5,254 | 2,145 |
| அனுமதிப் பத்தி ரக் கட்டணம் | 1,203 | - | 1,602 | - | 1,602 | - | 1,226 | - |
| ஏனைய வருமானங்கள் | 260,565 | - | 31,834 | - | 257,780 | - | 368,753 | - |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான சிட்டையிடல் ரூபா 89,080,916 தொகை எனினும், அவற்றில் ரூபா 21,010,791 தொகை எனப்படும் 23 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாது இருந்தது. | ஆண்டிற்கான சிட்டையிடலை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது வரித் தொகை யை அறவீடு செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருப்பதுடன், அதன்படி அவ்வறவீடுகள் மேற்கொள் ளப்பட்டது. |
| (ஆ) | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 61,996,522 தொகை எனினும், அவற்றில் மீளாய்வாண்டின் போது ரூபா 21,329,019 தொகை அறவிடப் பட்டிருந்ததனால், ரூபா 40,667,503 தொகை அதாவது 66 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | நிலுவை வீதவரி வருமானத்தை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். அந்தத் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| (இ) | வியாபார வரி மீதி ரூபா 267,685 தொகை எனினும், அவற்றில் ரூபா 201,685 தொகை அதாவது 75 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | வியாபார வரி மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2018.12.31 திகதியில் உள்ளவாறு வியாபார வரி அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான முயற்சிகள் எடுக்கப்படு கின்றன. |

### 2.3.3 வாடகை

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 161 கடைகளில் இருந்து ரூபா 4,422,994 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், அவை ஒரு மாதம் முதல் 74 மாதம் வரை யான வீச்சில் காணப்பட்டது. | நிலுவைக் கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். நிலுவையில் 26.2% மற்றும் 50 கோவைகள் சட்டவரைஞருக்கு அனுப்பப் பட்டுள்ளது. சட்டவரை ஞருக்கு ஞாபகப்படுத்தல் கடிதமும் அனுப்பப்பட்டி ருந்ததுடன், நிலுவை பதிவேட்டின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு கடிதங்கள் தயாரிக்கப்படு கின்றன. |
| (ஆ) | நகர சபையைச் சேர்ந்த 17 கடைகள் தொடர்பான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். இந்த உடன்படிக்கைகள் தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| (இ) | உடன்படிக்கைகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகளின் படி குறிப்பிட்ட காலவரையறை | விரைவாக உடன்படிக்கைகள் கையொப்பமிட | ஏற்றுக்கொள்கிறேன். காணப்படும் பெறுமதி மதிப்பீட்டின் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | முடியவடையும் போது புதிய உடன்படிக்கை கையொப்பமிடப்பட வேண்டியிருந்ததுடன், 100 கடைகளில் உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கிறேன். | வர்த்தக நிலையங்களுடன் உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்குவதற் காக நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. தற்போது நாளதுவரை ஆக்கப்பட்டு ள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**(அ) கைவிடப்பட்ட செய்பணிகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | பன்முகப்படுத்தப்பட்ட உதவியின் கீழ் செயற்படுத்த வேண்டிய ரூபா 1,300,000 தொகை பெறுமதியான 06 செயற்திட்டங்கள் பிரதேச செயலகத் திற்கு சாட்டப்பட்டதென குறிப்பிட்டு இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ii) | மாகாண சபை உதவியின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டிய ரூபா 17,650,000 தொகை பெறுமதியான 16 செயற்திட்டங்கள் வேறு ஒரு செயற்திட்டத்திற்கு நிதியம் மாற்றப்பட்டுள்ளதென குறிப்பிட்டு இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (iii) | மகிழ்ச்சிகரமான நகர் செயற்திட்டத் தின் கீழ் செயற்படுத்த வேண்டிய ரூபா 912,958 பெறுமதியான செயற் திட்டம் ஒன்று பாதை சச்சரவு காரணத்திற்காக இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு சிக்கல்களை தீர்த்து செயற்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன் |

**(ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | பொது நிதியத்தின் கீழ் செயற்படுத் தப்பட்ட ரூபா 40,945,740 தொகை பெறுமதியான 53 செயற்திட்டங்கள் காலநிலை காரணம், உடன்படிக்கை மேற்கொள்வதில் தாமதம் மற்றும் நிதி ஏற்பாடுகள் இன்மை ஆகிய காரணங்களினால் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மீதியான செயற் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 31 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பெபிலியான விளையாட்டு திடலை அபிவிருத்தி செய்வதற்காக 2012 முதல் 2018 வரை மாகாண சபை நிதியத்தில் இருந்தும் மற்றும் சபை நிதியத்தில் இருந்து ரூபா 17,795,849 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவில் அபிவிருத்தி அலுவல்களை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது மக்கள் பாவணைக்கு திறக்கப்பட்டு ள்ளது. |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2018 ஆண்டின் போது வகைப்படுத்த ப்பட்ட குப்பை 4602 தொன்கள் மற்றும் வகைப்படுத்தப்படாத குப்பை 32028 தொன்கள் கரதியான குப்பை செயற்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டி ருந்ததுடன் வகைப்படுத்தப்பட்ட குப்பையின் அளவு வகைப்படுத்தப் படாத குப்பையின் அளவில் 14.36 சதவீதமாக இருந்தது. குப்பை சேகரிப்பதில் முறையான முகாமைத்துவம் ஒன்று மேற்கொள் ளப்படாமையால் ரூபா 24,020,737 தொகை மிகையாக செலுத்த நேரிட்டிருந்தது. | குப்பை சேகரித்தல் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது குப்பை முகாமைத்துவத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | குப்பை போக்குவரத்துக்காக சபைக்குச் சொந்தமான 31 வாகனங்கள் மற்றும் 26 சாரதிகள் சபையில் காணப்படும் போது தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து போக்குவரத்து சேவை பெற்றுக் கொள்வதற்காக 2018 ஆண்டின் போது ரூபா 3,260,940 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | குப்பை போக்குவரத்துச் செலவை குறைக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| | | | |
|---|---|---|---|
| (அ) | வாடிக்கையாளர்களினால் வீதவரி செலுத்துவதற்காக வழங்கியிருந்த ரூபா 62,159 தொகை பெறுமதியான 06 காசோலைகள் மற்றும் அறிவித்தல் பலகை கட்டணமாக செலுத்தியிருந்த ரூபா 212,472 தொகை பெறுமதியான 03 காசோலைகள் மதிக்களிக்கப்படாது காணப்பட்டதுடன் அந்தப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பளிக்கப்படாத காசோலைகளுக்காக பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பளிக்கப்படாத வழக்குத் தாக்கல் செய்வதற்கு சபையின் சட்டவரைஞருக்கு அனுப்பப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வட்டியை மீண்டும் முதலீடு செய்யும் 05 நிலையான வைப்புக்களுக்கான மீளாய்வாண்டின் வட்டியை சீராக்கல் செய்யாத காரணத்தினால் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,985,767 தொகை யினால் குறைந்திருந்தது. | வட்டியை மீண்டும் முதலீடு செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். நாட்குறிப்பின் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வரைபுகள் மற்றும் கட்டிட பிரமாணங்கள் 2008-2020 இல் 14(1) அ உப பிரிவின் பிரகாரம் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு 08 வாரங்களுக்குள் வரைபுகள் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த துடன் 2017 மற்றும் 2018 ஆண்டுகள் தொடர்பாக 148 சந்தர்ப்பங்களில் 108 நாட்கள் முதல் 706 நாட்கள் வரை வரைபுகள் அங்கீகரிப்பதில் கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வரைபு மற்றும் கட்டிட பிரமாணங் களுக்கு இணங்க செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதி அளவில் 52 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சிரேஷ்ட மட்டத்தில் 02 பதவிகள் வெற்றிடங்கள் காணப்பட்டதால் சபையின் அலுவல்களை வினைத் திறனுடம் மற்றும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | | |
|---|---|---|---|
| (i) | இடமாற்றம் பெற்றுச் சென்று 24 மாதங்கள் முதல் 144 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த 05 உத்தியோகத்தர்களிடம் ரூபா 285,728 தொகைக்கான கடன் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. | கடன் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018.12.31 திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி தற்போது தவணை அடிப்படையில் அறவிடப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இறந்த/ சேவையை வெறிதாக்கிய/ ஓய்வுபெற்ற 42 உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,074,375 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். இவற்றில் ரூபா 299,970 அறவிடப்பட்டுள்ளது. மீதித் தொகையை எதிர்வரும் காலத்தில் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

---

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் 2008 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | தற்போது பெறுமதி மதிப்பீட்டு திருத்த அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டு வருவதுடன் அவ் விடயங்கள் 95% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2020 ஜனவரி முதல் புதிய பெறுமதி மதிப்பீட்டை செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வாடகையாளர்கள் 06 மாதங் களுக்கு மிகையான காலம் வாடகை செலுத்துவதை பகிஷ்கரித்து இருந்தால் வாடகை உடன்படிக்கை ஒருதலைப் பட்ஷமாக இரத்துச் செய்யக்கூடிய அதிகாரம் நகர சபைக்கு இருந்த போதிலும் 06 மாதங்கள் முதல் 97 மாதங்கள் வரை வாடகை தாமதப்பட்டு இருந்த கடைகளின் வாடகை உடன்படிக்கை களை இரத்துச் செய்து அந்தக் கடைகளை நகர சபைகளுக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாடகை உடன்படிக்கைகளின் படி செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். தற்போது நிலுவை காணப்படும் கடைகளுக்கு நிலுவைத் தொகையை செலுத்தும் படி கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. காணப்படும் நிலுவைத் தொகை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு கோவைகள் சட்டவரைஞருக்கு அனுப்பப் படும். |
| (இ) | சாராம்சத்தின் மூலம் வீதவரி இலக்கம் பெற்றுக்கொள்வதற்காக அல்லது பெயர்களை மாற்றும் போது பிரஜைகள் சாசனத்தின் பிரகாரம் 02 வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 05 நாட்கள் முதல் 124 நாட்கள் வரை காலதாமதம் காணப்பட்டது. | பிரஜைகள் சாசனத்தின் பிரகாரம் செயற்பட முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களும் செயற்படுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். அவ்வாறு தாதமதம் ஏற்படுவதற்கான நடைமுறைச் சாத்தியமான சிக்கல்கள் காணப்பட்டது. தாமதங் களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தாமை

| | | |
|---|---|---|
| நகர சபையினால் காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன் பொருட் பதிவேடு முறைப்பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் முறைப் படி நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். | காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள படிவத்தின் பிரகாரம் காணப்படவில்லை என்பதை ஒப்புக்கொள் கிறேன். தகவல்களை உட்படுத்தி எதிர்பார்த்த மட்டத்தில் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்று தாயரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.<br><br>பொருட் பதிவேடு முறைப் பிரகாரம் பேணப்பட்டு வந்திருக்கிவல்லை என ஏற்றுக்கொள்கிறேன். கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை சரிசெய்து பொருட் பதிவேட்டை பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| ஹோமாகம பிரதேச சபையினால் 2002 ஆண்டின் போது மஹரகம நகர சபைக்கு வழங்கியிருந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 02 டிரக்டர் வண்டிகள் மற்றும் டேலர் ஒன்றினை சபைக்கு உரித்தாக்கி இருக்கவில்லை. | வாகனங்களை நகர சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். ஹோமாகம பிரதேச சபை யினால் 2001 ஆண்டின் போது மாநகர சபைக்கு வழங்கியிருந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்த மான டிரக்டர் மற்றும் டேலர்கள் இந்த சபைக்கு உரித்தாக்குவதற்காக பல முறை கடிதங்கள் அனுப்பினேன். |

### 3.5.3 வருடாந்த பண்ட/ இருப்பு கணிப்பீடு

| | | |
|---|---|---|
| நடைமுறை ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டின் பிரகாரம் மிகைகள்/ பற்றாக்குறைகள் முறைப் பிரகாரம் பதிவு செய்து அது தொடர்பான இறுதி அறிக்கை அல்லது இருப்பு மீதி சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பண்டக் கணிப்பீட்டின் பிரகாரம் மிகைகள்/ பற்றாக்குறைகள் தொடர்பாக இறுதி அறிக்கை வெளியிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2010 முதல் 2018 வரையான காலப் பகுதியுள் 119 அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 57,006 தொகை பெறுமதியான 199 நூலகப் புத்தகங்கள் திருப்பி ஒப்படைக்கப் பட்டிருக்கவில்லை. | நூலகப் புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கு அல்லது நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். 2019 ஆண்டில் அங்கத்தவர்களுக்கு அறிவித்ததன் மூலம் கடந்த வருடத்தை விட கூடுதலான எண்ணிக்கையான புத்தகங்கள் திருப்பிப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்று 2017 நவம்பர் 03 ஆந் திகதி விபத்திற்குள்ளாகி இருந்ததுடன், ஆரம்ப அறிக்கையின் படி நட்டத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 500,000 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது அப்போதைக்கு இந்தப் பிரச்சினையின் நடப்பு நிலைமை கணக்கீட்டு கொள்கைகளின் மூலம் குறிப்பிடப்படுகிறேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | | |
|---|---|---|
| பாதீட்டு ஏற்பாடுகள் ரூபா 32,833,000 தொகைக்கான 10 வருமானத் தலைப்புகளின் மூலம் எதுவித வருமானத்தையும் உழைத்திருக்காததுடன் ரூபா 45,264,000 தொகைக்கான 141 செலவுத் தலைப்புகளின் மூலம் மீளாய்வாண்டின் போது செலவுகள் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பாதீட்டு ஏற்பாடுகளின் படி உச்ச மட்ட இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். தைத்த ஆடை சந்தை ஒன்று மற்றும் மாடிவீட்டுத் திட்டம் ஒன்று செய்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும் அந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனதால் ரூபா 3 கோடித் தொகை உழைக்க முடியாமல் போனது. அதேபோல் காப்புறுதி நட்டஈடு கிடக்கும் என எதிர்பார்த்த போதிலும் அவை வருமானத் தலைப்பு களிலும் பணம் உழைக்க முடியாமல் போனது. அந்த செலவுத் தலைப்புகளை பாதீட்டில் |

| | | |
|---|---|---|
| | | இருந்து அகற்றினால் மீண்டும் செலவுத் தலைப்பை ஏற்படுத்த முடியாமையால் சிறிய பெறுமதி ஒன்றைக் காட்டி மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டது. |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| | | |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நோக்கங்களை மற்றும் கருமங் களை நிறைவேற்றிக் கொள்ளும் விதமாக பல்வேறு முறைமைகள் அமைக்கப்பட்டு இருக்காததுடன் நிறுவனத்தின் பணம் மற்றும் நிருவாக அலுவல்களில் இருந்து விடுவிக்கப்பட்ட அலகு ஒன்றாக செயற்படுவதற்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் சுதந்திரம் நிறுவப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு முன்வரும் காலங்களுக்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாள் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 ஜூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/1 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் குறைந்த பட்சம் காலாண்டுக்கு ஒரு முறையேனும் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 ஆண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறிப்பிட்ட வருடத்தில் அடிக்கடி இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டமையால் உரிய விதத்தில் அந்த விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் போனாலும் எதிர்காலத்தில் அந்தக் குழுக்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |